**மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே!**

**வணக்கம்**.

2024 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தில் எனது உரையை நிகழ்த்துவதை நான் பெரும்பேறாகக் கருதுகிறேன். அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதோடு, இப்புத்தாண்டில் நமது மாநிலத்தில் மகிழ்ச்சியும், வளமும், நலமும் தழைத்தோங்க எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்த இந்த அரசின் உயர்ந்த நோக்கங்களை, காலத்தை வென்ற ஐயன் திருவள்ளுவரின் குறள் ஒன்றைக் குறிப்பிட்டு, எனது உரையை தொடங்க விரும்புகின்றேன்.

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து

(குறள்-738)

*மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டுக்கு அழகு.*

2. கடந்த பத்தாண்டுகளில் நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் ஆற்றல் மையமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. நாட்டின் நிலப்பரப்பில் 4 சதவீதத்தையும், மக்கள்தொகையில் 6 சதவீதத்தையும் மட்டுமே கொண்டுள்ள நமது மாநிலம், இந்தியாவின் பொருளாதாரத்தில் 9 சதவீதத்திற்கும் அதிகமான பங்கினை அளிக்கிறது. 2022-23 ஆம் ஆண்டில், 7.24 சதவீத நிலையான தேசிய வளர்ச்சி வீதத்தை விஞ்சி, நமது மாநிலத்தின் பொருளாதாரம் 8.19 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதே வேளையில், சராசரி பணவீக்கத்தைப் பொறுத்தவரை, 2022-23 ஆம் ஆண்டில் நாட்டின் 6.65 சதவீத பணவீக்கத்துடன் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டின் பணவீக்கம் 5.97 சதவீதமாக உள்ளது. நாட்டைவிட தமிழ்நாடு வேகமாக வளர்ச்சியடைவதோடு, அதே காலகட்டத்தில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும் நமது மாநிலம் திறம்படச் செயல்பட்டு வருவதை இது மெய்ப்பிக்கிறது.

3. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ், இந்த அரசின் அயராத முயற்சியின் விளைவாக, குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியினை தமிழ்நாடு கண்டுள்ளது. மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள பெரும் முன்னேற்றத்தினால், 2021-22 ஆம் ஆண்டில் நான்காம் இடத்திலிருந்த நமது மாநிலம், 2022-23 ஆம் ஆண்டில் நாட்டிலேயே முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது. நிதி ஆயோக்கின் 2022 ஆம் ஆண்டு ஏற்றுமதித் தயார்நிலைக் குறியீட்டின்படி, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களை விஞ்சி, நாட்டிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

4. வலுவான பொருளாதாரம், சமூக இணக்கத் தன்மை மற்றும் மகத்தான மக்களாட்சி ஆகியவையே, நமது மாநிலம் தொடர்ந்து நாட்டிலேயே அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் முதல் முகவரியாகத் திகழ்வதற்கு வழிவகுக்கின்றன. கடந்த ஜனவரி 7 மற்றும்

8 ஆம் தேதிகளில் சென்னையில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட **உலக முதலீட்டாளர்கள் மாநாடு** இதற்கு ஒரு சான்றாகும். தமிழ்நாட்டின் தலைசிறந்த தொழில் சூழலமைப்பையும் அதன் எதிர்காலத்திற்கேற்ற வகையிலான மனிதவளத்தையும் உலகிற்குப் பறைசாற்றும் வகையில் இந்நிகழ்வு அமைந்தது. முப்பதிற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து புகழ்பெற்ற அறிஞர்கள், முன்னணி நிறுவனங்களின் மூத்த நிர்வாகிகள், கொள்கை வகுப்பாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்ற இந்நிகழ்வு தமிழ்நாட்டை உலகளவில் தலைமை நிலைக்கு உயர்த்துவதற்கு உகந்த தளமாக அமைந்தது.

5. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, 14.54 இலட்சம் நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், முன் எப்போதும் இல்லாத அளவிலான, மொத்தம் 6.64 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் செய்வதற்கு, சாதனை படைக்கும் வகையில் நிறுவனங்களுடன்

தமிழ்நாடு அரசு 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இம்முதலீடுகள், மாநிலத்தின் முன்னேற்றப் பாதையை வடிவமைத்து, உயர்நிலை பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யும். மேலும், இந்நிகழ்வில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் '**1 டிரில்லியன் டாலர் தமிழ்நாடு பொருளாதாரம் குறித்த தொலைநோக்கு**' ஆவணத்தை வெளியிட்டார். இந்த உயரிய இலக்கை அடைவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நமது அரசு மேற்கொண்டு வருகிறது.

6. தமிழ்நாட்டில் விளையாட்டை மேம்படுத்துவதற்கு இந்த அரசு இடைவிடாத முயற்சிகளை மேற்கொண்டு வருவதுடன், நம் மாநிலத்தை நாட்டின் முன்னணி விளையாட்டு மையமாகவும் நிலைநிறுத்தியுள்ளது. சர்வதேச செஸ் ஒலிம்பியாட் மற்றும் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் போன்ற மகத்தான விளையாட்டு நிகழ்வுகளை சிறப்பாக நடத்தியதன்

மூலம், அந்த நோக்கம் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது. 6-வது **கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்**, தமிழ்நாட்டில் முதன்முறையாக ஜனவரி, 19, 2024 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களால் பிரமாண்டமாகத் தொடங்கி வைக்கப்பட்டது. 13 நாட்கள் நடைபெற்ற இப்போட்டிகளில், 26 விளையாட்டுப் பிரிவுகளில் நாடு முழுவதிலுமிருந்து 5,600 இளம் விளையாட்டு வீரர்கள் தேசிய அரங்கில் தங்களின் திறனை வெளிப்படுத்தினர். இம்முறை தமிழ்நாடு 38 தங்கம், 21 வெள்ளி மற்றும் 39 வெண்கலம் என மொத்தம் 98 பதக்கங்களைப் பெற்று, இந்தியாவிலேயே இரண்டாமிடம் பிடித்து சாதனை படைத்தது. இந்த நிகழ்வுகளும், நவீன விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க அரசால் வடிவமைக்கப்பட்ட பெருந்திட்டங்களும், திறமையான விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க உகந்த சூழலை உருவாக்குவதோடு, உலகளாவிய விளையாட்டு அரங்கில் நமது மாநிலத்தை ஒரு முன்னணி மாநிலமாக

நிலைநிறுத்துவதற்கும் வழிவகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

7. நமது மாநிலம், கடந்த சில ஆண்டுகளில் பல பேரழிவுகளைச் சந்தித்தபோதிலும், பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றம் ஆகிய இரண்டிலும் குறிப்பிடத்தக்க சாதனையை அடைந்துள்ளது என்பது பாராட்டத்தக்கது. சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகள் எதிர்கொண்ட மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் வரலாறு காணாத மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகளால் மாநிலம் அடுத்தடுத்து இரண்டு பெரும் இயற்கைப் பேரிடர்களைச் சந்தித்தது.

8. மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் 44 மணி நேரம் வரலாறு காணாத அளவில் தொடர்ந்து பெருமழை பெய்தது. வெள்ள நிவாரண நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள

முழு அரசு இயந்திரமும் போர்க்கால அடிப்படையில் முடுக்கிவிடப்பட்டு, நிவாரணப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு மேற்கொண்டது. திறமையான திட்டமிடல், மற்றும் செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கத்தின் நீர் மேலாண்மை போன்றவற்றால் மனித உயிரிழப்புகள் மற்றும் சொத்து இழப்புகள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன. எனினும், பலத்த மழையால் அதிகளவில் வெள்ளம் ஏற்பட்டதால், இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் உடைமைகள் மற்றும் வாழ்வாதாரத்தை இழக்க நேரிட்டது. அரசால் மேற்கொள்ளப்பட்ட துரித நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளின் விளைவாக பெரும்பாலான பகுதிகள் ஒரு சில நாட்களிலேயே இயல்புநிலைக்குத் திரும்பின. மிக்ஜாம் புயலின் பாதிப்பில் இருந்து நமது மாநிலம் மீள்வதற்கு முன்னரே, தென் மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகியவை வரலாறு காணாத கனமழையால் ஏற்பட்ட

வெள்ளப்பெருக்கால் மிகவும் பாதிக்கப்பட்டன. இப்பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் கணிசமான அளவில் உயிரிழப்புகள் ஏற்பட்டு, உடைமைகளும் சேதமடைந்தன.

9. மக்களின் துயர் நீக்கும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1,487 கோடி ரூபாய் செலவில், சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் பேரிடரால் பாதிக்கப்பட்ட 24.25 இலட்சம் குடும்பங்களுக்கு தலா 6,000 ரூபாய் ரொக்கம் உள்ளிட்ட பல நிவாரண உதவிகளை அறிவித்தார். மேலும், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பெரிதும் சேதமடைந்த பகுதிகளில், பாதிக்கப்பட்ட 6.63 இலட்சம் குடும்பங்களுக்கு ரொக்க நிவாரண உதவியாக தலா 6,000 ரூபாயும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் சேதமடைந்த பகுதிகளிலுள்ள, பாதிக்கப்பட்ட சுமார் 14.31 இலட்சம் குடும்பங்களுக்கு,

தலா 1,000 ரூபாயும், 541 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும் என அறிவித்தார்.

10. மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் வரலாறு காணாத எதிர்பாரா மழைப்பொழிவினால் மாநிலத்தின் பொதுச் சொத்துகள் மற்றும் கட்டமைப்புகளுக்கு பெருமளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. எனவே, தற்காலிக மற்றும் நிரந்தர மறுசீரமைப்புப் பணிகளுக்காக தென் மாவட்டங்களுக்கு 18,214 கோடி ரூபாயும், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு 19,692 கோடி ரூபாய் நிதி தேவைப்படுகிறது. இப்பேரழிவின் பாதிப்புகள் குறித்து ஒன்றிய அரசிடம் வழங்கப்பட்ட இரண்டு விரிவான அறிக்கைகளின் அடிப்படையிலும் ஒன்றிய அரசு அலுவலர் குழுவின் நேரடி ஆய்வின் அடிப்படையில் தேசியப் பேரிடர் நிவாரண நிதியில் இருந்து உடனடியாக ஒன்றிய அரசு நிதி வழங்கும் என்று நம்புகிறோம்.

11. இயற்கைப் பேரிடர்களைத் திறம்படக் கையாண்ட இந்த அரசிற்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்வரும் மாதங்களில் நமது மாநிலமும் அதன் பொருளாதாரமும், இந்த பாதிப்புகளிலிருந்து வலிமையுடன் மீண்டெழும் என்று உறுதியாக நம்புகிறேன்.

12. இயற்கைப் பேரிடர்களால் ஏற்பட்ட பெரும் நிதிச்சுமை நிலவும் நிலையில், சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மாநிலங்களின் நிதி ஆதாரங்களைத் திரட்டும் திறனும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மாநிலங்கள் தங்களது வரிவிதிக்கும் அதிகாரங்களை விட்டுக்கொடுக்க ஒப்புக்கொண்டபோது, சரக்கு மற்றும் சேவை வரி முறையின் முந்தைய காலத்திற்கு இணையான வருவாய் எட்டப்படும் வரை மாநிலங்களுக்குப் போதுமான இழப்பீடு வழங்கப்படும் என்ற நியாயமான எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், ஒன்றிய அரசு 30.06.2022 அன்று சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு முறையை

நிறுத்தியதன் விளைவாக, ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசுக்கு ஏறத்தாழ 20,000 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு முறையை ஒன்றிய அரசு தொடர்ந்திட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

13. இந்நிதி நெருக்கடிக்கு இடையே, சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டத் திட்டப் பணிகளுக்கு தனது பங்களிப்பை வழங்குவதாக உறுதியளித்திருந்த ஒன்றிய அரசு தனது வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இத்திட்டத்தில் ஒன்றிய அரசும் நமது அரசும் 50:50 என்ற விகிதத்தில் சமபங்களிப்பு இருக்கும் என்ற அடிப்படையில் 63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டம், 2021-22 ஆம் ஆண்டின் ஒன்றிய வரவு-செலவுத் திட்ட உரையில் ஒன்றிய நிதியமைச்சரால் அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது. ஆனால், 17.08.2021 அன்று திட்ட முதலீட்டு வாரியம் (PIB)

ஒப்புதல் அளித்தும் இத்திட்டத்திற்கு ஒன்றிய அரசால் ஒப்புதல் அளிக்கப்படவில்லை. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கருத்துரு நிலுவையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், இதே காலகட்டத்தில் பிற மாநிலங்களின் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது மேலும் வருத்தத்தை அளிக்கின்றது. இந்த நியாயமற்ற அணுகுமுறையின் விளைவாக, இரண்டாம் கட்டத்திற்கான முழுச் செலவினமும் மாநில அரசால் அதன் வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. இதனால், மாநில நிதிநிலையில் கடுமையான நெருக்கடி ஏற்படுகிறது. எனவே, ஒன்றிய அரசு இத்திட்டத்திற்கான ஒப்புதலை விரைவில் அளிக்குமாறு வலியுறுத்துகிறோம்.

14. இத்தகைய சவால்களுக்கு இடையேயும் மக்களின் குறைகளை உடனுக்குடன் களைந்திடும் திறன்மிகு நிர்வாகத்தை வழங்கிட இந்த அரசு

உறுதியாக உள்ளது. '**முதல்வரின் முகவரி**' என்ற துறையின் கீழ், இதுவரை, மொத்தம் 20.31 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, தகுதிகளின் அடிப்படையில் 19.69 இலட்சம் மனுக்களுக்கு வெற்றிகரமாகத் தீர்வுகள் காணப்பட்டுள்ளன. அரசு நிருவாகத்தையும் பொதுமக்களையும் மேலும் இணைக்கும் பொருட்டு, இந்த அரசு, '**மக்களுடன் முதல்வர்**' என்ற மற்றொரு முன்னோடித் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் பெயருக்கேற்ப, தமிழ்நாட்டு மக்களின் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து உடன் பயணிப்பார் என்ற நம்பிக்கையை இந்த முன்னோடித் திட்டம் விதைத்துள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில், அனைத்து மாவட்டங்களிலுள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் புறநகரைச் சுற்றியுள்ள (peri-urban) ஊராட்சிகளில், 30 நாட்களுக்குள் சேவைகளை வழங்கி,

மனுக்கள் மீது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள, 2,058 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. பொதுமக்களோடு நேரடித் தொடர்பில் உள்ள 13 அரசுத் துறைகள் வழங்கும் சேவைகள் மீது இந்த முகாம்கள் கவனம் செலுத்துகின்றன. இதுவரை பெறப்பட்ட 2.67 இலட்சம் மனுக்களில், 2.40 இலட்சம் மனுக்களுக்கு மனநிறைவுடன் தீர்வு காணப்பட்டுள்ளது.

15. சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு மற்றும் மத நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு மாநில அரசு முன்னுரிமை வழங்குவதினால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களால் தமிழ்நாடு அமைதியான மாநிலமாகக் கருதப்படுகிறது. இது, அண்மையில் நடந்து முடிந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. குற்றச் செயல்களைத் தடுப்பதில் இந்த அரசு சமரசமற்ற அணுகுமுறையைக் கடைபிடித்து வருகிறது. மேலும், சமுதாயக் கண்காணிப்பு, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கண்காணிப்பு மற்றும் குற்றச் செயல்களில்

ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தல், சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்திட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

16. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமூகநீதி மற்றும் சமத்துவம் ஆகிய கொள்கைகளின் அடிப்படையிலான திராவிட மாடல் ஆட்சி முறையைப் பின்பற்றுவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. பெண்களின் முழுமையான ஆற்றலையும் திறமைகளையும் செம்மையாகப் பயன்படுத்தும்போது மட்டுமே சமூகத்தில் உண்மையான முன்னேற்றம் சாத்தியமாகும் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது. இந்த நோக்கத்துடன், இந்த அரசு தனது முதன்மைத் திட்டமான '**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத்**' தொடங்கி, 1.15 கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் மாதந்தோறும் 1,000 ரூபாய் உரிமைத்தொகை வழங்கி, தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிக்

காட்டியுள்ளது. தமிழ்நாட்டின் பெரும் தலைவர்களுக்குப் புகழ் சேர்க்கும் வகையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில், 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாளன்று இத்திட்டம் தொடங்கப்பட்டது. பெண்களின் முன்னேற்றத்திற்கு வித்திட்ட இப்பெருந்தலைவர்களின் அயராத முயற்சிகளைத் தொடர்ந்திடும் வகையில் உருவாக்கப்பட்ட இத்திட்டம், மாநிலத்தில் பெண்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குப் பெருமளவில் ஊக்கமளிக்கும்.

17. பெண்களின் முன்னேற்றத்திற்கு கல்வி முக்கியம் என்பதை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு, உயர்கல்வியில் மாணவியர் சேர்க்கையை உயர்த்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இந்த இலக்கினை நோக்கி, அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று, பின்னர் உயர்கல்வி பயிலும் அனைத்து

மாணவிகளுக்கும் மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கிடும் வகையில், '**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு புதுமைப் பெண் திட்டம்**' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நடப்புக் கல்வியாண்டில், இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் 2.73 இலட்சம் மாணவிகள் பயனடைகின்றனர். இம்முயற்சியின் விளைவாக, நடப்புக் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பயின்று, கல்லூரிகளில் சேரும் மாணவியரின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

18. சாதாரண நகரப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றிப் பயணிக்கும் மிகவும் சிறப்பு வாய்ந்த '**விடியல் பயணத் திட்டத்தைச்**' செயல்படுத்துவதில் இந்த அரசு, நமது நாட்டிற்கே முன்னோடியாகத் திகழ்கிறது. இதன் விளைவாக, பேருந்துப் பயணங்களில் பெண்களின் பங்கு 40 சதவீதத்திலிருந்து 65 சதவீதமாக உயர்ந்து, பெண்கள் எளிதாகப் பயணம் செய்யவும், முன்னேறிடவும் வழிபிறந்துள்ளது.

19. 1989 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட சுயஉதவிக் குழு திட்டம், இன்று நாடு முழுவதும் மாபெரும் இயக்கமாகத் தழைத்துள்ளது. பொருளாதாரத்தில் தன்னிறைவும் சமூகத்தில் உரிய அதிகாரமும் பெற்ற மகளிர் சமூகத்தை உருவாக்கும் வகையில், சுயஉதவிக் குழுக்களை விரிவுபடுத்தி மேலும் வலுப்படுத்துவதற்கு இந்த அரசு தொடர் முயற்சிகளை எடுத்து வருகிறது. 2023-24 ஆம் ஆண்டில், இதுவரை 3.20 இலட்சம் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களை உறுப்பினர்களாகக் கொண்டு 27,539 புதிய சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், சுயஉதவிக் குழு வங்கிக் கடன் இணைப்புத் திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டில் சுயஉதவிக் குழுக்களுக்கு 30,000 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் வழங்கிட அரசால் உயர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை, சுயஉதவிக் குழுக்களுக்கு 24,926 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இலக்கு முழுமையாக எய்தப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

20. நமது அரசால் செயல்படுத்தப்படும் இத்தகைய நலத்திட்டங்களால்தான் தமிழ்நாடு நம் நாட்டிற்கே முன்மாதிரியாகத் திகழ்கிறது. இன்று உலகளவில் கொண்டாடப்படும் மதிய உணவுத் திட்டம், ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் சென்னை மாநகராட்சியால் முதன்முதலில் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகும். 1962 ஆம் ஆண்டில் தொலைநோக்குப் பார்வை கொண்ட முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1982-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் சத்துணவுத் திட்டமாக மாற்றப்பட்டு, 1989-ம் ஆண்டு மதிய உணவில் முட்டையை அறிமுகப்படுத்தி முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் மேலும் மேம்படுத்தப்பட்டது.

21. நாட்டிலேயே பல முன்னோடி நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வரும் நம் மாநிலத்தின் மாபெரும் மரபின் தொடர்ச்சியாக, இந்த அரசின் முன்னோடித் திட்டமான '**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத்**' தொடங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் பெயரை இந்திய வரலாற்றில் மீண்டும் ஒருமுறை பொறித்துள்ளார். இந்தியத் திருநாட்டிற்கே முன்மாதிரியாக விளங்கும் இத்திட்டத்தை தெலுங்கானா மாநிலம் பின்பற்றத் தொடங்கியுள்ளது. முதல் ஆறு மாத காலத்திற்கு 1,543 பள்ளிகளில் நடத்தப்பட்ட முதற்கட்ட சோதனைக்குப் பிறகு, இத்திட்டம் மாநிலத்தில் உள்ள 30,992 அரசு தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 16.85 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான இலட்சக்கணக்கான மாணவர்களுக்கு காலையில், தேர்ந்தெடுக்கப்பட்ட சத்தான உணவை

இத்திட்டம் வழங்குகிறது. இதன் மூலம் அவர்களது ஊட்டச்சத்து உயர்வது மட்டுமன்றி, மாணவர்களின் வருகைப் பதிவும், கற்றல் விளைவுகளும் மேம்பட்டுள்ளன. மேலும், இலட்சக்கணக்கான உழைக்கும் பெண்கள் மற்றும் தாய்மார்களின் சுமைகளை இந்த அரசு பகிர்ந்து கொள்வதால், இத்திட்டம் பெண்களின் சமூக மேம்பாட்டிற்கும் வழிவகுத்துள்ளது.

22. தந்தை பெரியாரின் இலட்சியங்களைப் பின்பற்றி, அனைத்து குடிமக்களின் கண்ணியத்தையும், குறிப்பாக விளிம்புநிலை மக்களின் கண்ணியத்தைக் காத்திட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. விளிம்புநிலைச் சமூகங்களை மேம்படுத்துவது அரசின் தார்மீகக் கடமை மட்டும் அல்ல, மாறாக மக்களின் உரிமை என்று இந்த அரசு நம்புகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, **ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தமிழ்நாடு மேம்பாட்டுச் செயல் திட்டம்-2024** எனும்

சட்ட முன்வடிவை நடப்புக் கூட்டத் தொடரின் போது அரசு அறிமுகப்படுத்த உள்ளது.

23. இதனைத் தொடர்ந்து, ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளிலுள்ள, ஆதி திராவிடர் குடியிருப்புகளில் முழுமையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காக '**அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தை**' இந்த அரசு தொடங்கியுள்ளது. குடிநீர் வழங்கல், மின்வசதி, குடியிருப்புகளுக்கு சாலை வசதி, பூங்காக்கள் மற்றும் நூலகங்கள் உள்ளிட்ட பொதுப் பயன்பாட்டு வசதிகள் போன்ற 1,769 பணிகளுக்காக, 2023-24 ஆம் நிதியாண்டில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது .

24. மானியத்துடன் கூடிய கடனுதவி வாயிலாக, ஆதி திராவிடர் / பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த தொழில்முனைவோரின்

பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக '**அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்**' என்ற முன்னோடித் திட்டத்தை இந்த அரசு தொடங்கியுள்ளது. 2023-24 ஆம் ஆண்டில், 755 பயனாளிகளுக்கு 84 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

25. ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்குப் பெருமளவில் உதவிடும் வகையில், விடுதிகளில் **மாதாந்திர உணவுக் கட்டணத்தை பள்ளி மாணவர்களுக்கு 1,000 ரூபாயிலிருந்து 1,400 ரூபாயாகவும் கல்லூரி மாணவர்களுக்கு 1,100 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும் அரசு உயர்த்தியுள்ளது**. இதன் மூலம், மாநிலத்தில் 1.71 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

26. **'யாதும் ஊரே யாவரும் கேளிர்'**

– கணியன் பூங்குன்றனார்

சங்ககாலத் தமிழர் கடைபிடித்த உலக உடன்பிறப்பு நேயத்தை எடுத்துரைக்கும் இந்த மகத்தான வரிகள் தான் இந்த அரசை வழிநடத்திச் செல்கின்றன. வேற்றுமையில் ஒற்றுமை என்ற நமது நாட்டின் உன்னதமான கொள்கைகள் தற்போது கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் வேளையில், தமிழ்நாட்டில் சமூக நல்லிணக்கத்தைப் பேணி பாதுகாப்பதில் நமது அரசு உறுதியாக உள்ளது. சிறுபான்மையினர் மற்றும் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுடன் என்றும் நாம் துணை நிற்போம். அந்த வகையில் ஒன்றிய அரசின் குடியுரிமை திருத்தச் சட்டத்தை தமிழ்நாட்டில் ஒரு போதும் நடைமுறைப்படுத்த அனுமதிப்பதில்லை என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

27. அரசின் பல்வேறு நலத்திட்டங்களின் பலன்கள் தகுதியானவர்களைச் சென்றடைவதன் மூலமாகவே, அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்கிட இயலும். இந்த அடிப்படையிலேயே, 2021 ஆம் ஆண்டில் நடைபெற்றிருக்க வேண்டிய தேசிய பத்தாண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு அடுத்து மேற்கொள்ளப்படும்போது சாதிவாரியான மக்கள்தொகை கணக்கெடுப்பையும் ஒருங்கிணைத்து நடத்திடுமாறு மாண்புமிகு பிரதமர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார். நம்பகத்தன்மை வாய்ந்த புள்ளிவிவரங்களின் அடிப்படையில் ஆராய்ந்து, உரிய கொள்கை முடிவுகளை எடுத்திட இந்த முயற்சி பெரும் உதவியாக இருக்கும் என்பதால் இக்கோரிக்கை ஒன்றிய அரசால் ஏற்கப்படும் என்றும் இந்த அரசு நம்புகிறது.

28. சமத்துவ மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தினை உறுதிசெய்திடும்

நோக்கத்தின் ஒரு பகுதியாக, **கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மாத உதவித்தொகையை 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாகவும், மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியத்தை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும் இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது**. தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தில், மருத்துவ உதவி, விபத்தால் ஏற்படும் மரணத்திற்கான இழப்பீடு போன்ற உதவிகளும் நடப்பாண்டில் இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளன. இத்தகைய முயற்சிகள் மூலம் 10.11 இலட்சம் மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும்.

29. குறைந்த வருவாய் ஈட்டுவோர், தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இயலாத நபர்கள், குறிப்பாக, முதியோர்கள், ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்றவர்களின் நலன் காக்க, அரசு பல்வேறு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களைச் செயல்படுத்தி

வருகிறது. இவர்களுக்கான **மாத ஓய்வூதியத்தை 2023 ஆம் ஆண்டில், 1,000 ரூபாயிலிருந்து 1,200 ரூபாயாக** உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், 845 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. மேலும், நிலுவையில் இருந்த அனைத்து விண்ணப்பங்களுக்கும் தீர்வுகாணப்பட்டதன் பயனாக, 74,073 தகுதியுடைய பயனாளிகள் புதிதாக சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

30. விவசாயிகளின் நலன் மற்றும் வேளாண் வளர்ச்சி மேம்பட பல முன்னோடித் திட்டங்களை இந்த அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. 76 கோடி ரூபாய் செலவில் குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்தைச் செயல்படுத்தியதன் விளைவாக, நடப்பாண்டில் குறுவை சாகுபடிப் பரப்பு, முன்னெப்போதும் இல்லாத அளவில் 5.59 இலட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. முழுமையான வேளாண் வளர்ச்சியை எய்திடத் தேவையான கட்டமைப்புகளை ஏற்படுத்திட, இந்த ஆண்டில் 190 கோடி ரூபாய்

செலவில் 2,504 கிராம ஊராட்சிகளில் '**கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டப்**' பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

31. சாகுபடிச் செலவைக் குறைத்து விவசாயிகளின் வருவாயை உயர்த்தும் முயற்சியாக, 2023-24 ஆம் ஆண்டில் மேலும் 50,000 புதிய வேளாண் மின் இணைப்புகள் இந்த அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, மொத்தமாக 2 இலட்சம் புதிய வேளாண் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

32. மாநிலத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் வருவாயை உயர்த்தும் நோக்கத்துடன், **விவசாயிகளால் வழங்கப்படும் பசும்பால் மற்றும் எருமைப் பால் லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் ஊக்கத் தொகையாக** இந்த அரசு அறிவித்துள்ளது. குறுகிய காலத்திலேயே பால் கொள்முதல் விலையை 6 ரூபாய் உயர்த்தியுள்ளது வரலாற்றில் இதுவே

முதல்முறை ஆகும். அரசின் இந்த முயற்சிகள், நுகர்வோரின் நலன்களை எவ்விதத்திலும் பாதிக்காமல் மாநிலத்தில் உள்ள 3.87 இலட்சத்திற்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு பயனளித்துள்ளன.

33. மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளில் தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டிட இந்த அரசு உறுதியாக உள்ளது. இப்பிரச்சினைகளில் நமது மாநில விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். மாண்பமை உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையம், நதிநீர்ப் பங்கீட்டிற்கான அறிவியல்ரீதியான கணக்கீட்டை உருவாக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துவதோடு, காவிரியில் மேகதாது அணை கட்டுவதை தடுக்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் முன்னெடுப்போம்.

34. மீனவர்களின் நலனில் இந்த அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றது. மேலும், மாநிலத்தின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் நமது மீனவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் இந்த அரசு செயல்பட்டு வருகின்றது. 2023 ஆம் ஆண்டில், இலங்கை கடற்படையினர் 243 மீனவர்களை அவர்களின் மீன்பிடிப் படகுகளுடன் கைது செய்தனர். இந்த அரசின் இடைவிடாத முயற்சியால், இதுவரை 242 மீனவர்களும், 1 மீன்பிடிப் படகும் விடுவிக்கப்பட்டு தாயகம் திரும்பினர். இருப்பினும், கடந்த ஒரு மாதத்தில் மட்டும், 88 மீனவர்கள் அவர்களது மீன்பிடிப் படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். தூதரக அளவிலான வழிமுறைகளைப் பின்பற்றி மீதமுள்ள மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண ஒன்றிய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

35. மாநிலத்தின் பல்லுயிர் வளத்தைப் பாதுகாப்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. இந்த நோக்கத்தோடு, மாநில விலங்கின் வாழ்விடத்தைப் பாதுகாக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் '**நீலகிரி வரையாடு திட்டம்**' தொடங்கப்பட்டது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களின் சட்டவிரோத கடத்தலைத் தடுக்கும் வகையில் **தமிழ்நாடு வனம் மற்றும் வனவிலங்கு குற்றக் கட்டுப்பாட்டு மையம்** ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது நமது மாநிலத்தின் வனவியல் பாதுகாப்பு வரலாற்றில் ஒரு புதிய மைல்கல் ஆகும். '**மீண்டும் மஞ்சப்பை**', '**தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்**' மற்றும் '**சுற்றுச்சூழல் வீராங்கனைகள்**' ஆகிய நமது அரசின் மூன்று முன்னோடி முயற்சிகளும், ஒன்றிய சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வன அமைச்சகத்தால் சிறப்பான நடைமுறைகளாக

அங்கீகரிக்கப்பட்டு, அண்மையில், துபாயில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் (CoP-28) காட்சிப்படுத்தப்பட்டு உலகளவிலான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

36. நமது மாநிலத்தின் சுகாதார நிறுவனங்களின் வியத்தகு சாதனைகளால், மருத்துவச் சுற்றுலாவில் நாட்டிலேயே முதன்மையான இடமாக தமிழ்நாடு திகழ்கிறது. இதற்காக மருத்துவ கட்டமைப்பின் தரத்தை மேலும் மேம்படுத்துவதில் இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக, 15 மாத காலத்திற்குள்ளாகவே கிண்டியில் 1,000 படுக்கைகள் கொண்ட **கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை** 240 கோடி ரூபாய் செலவில் அரசு கட்டமைத்து செயல்பாட்டிற்கு கொண்டுவந்து சாதனை புரிந்துள்ளது.

37. தொற்றா நோய்களின் பரவலைத் தடுக்கும் நோக்கத்துடன், மக்கள் வீட்டில் இருந்தபடியே கட்டணமில்லா மருத்துவ சேவையைப் பெற்றுப்

பயனடையும் வகையில், இந்த அரசால் தொடங்கப்பட்ட '**மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்**' மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இதுவரை, இத்திட்டத்தின் கீழ் 1.07 கோடி நபர்கள் பயனடைந்துள்ளனர்.

38. நாட்டிலேயே முன்னோடி முயற்சியாக, விபத்து நடந்த முதல் 48 மணி நேரத்திற்குள் அனைவருக்கும் கட்டணமில்லா, அவசர சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்திட இந்த அரசு '**இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48**' திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ், மதிப்புமிக்க எண்ணற்ற உயிர்கள் காக்கப்பட்டு இதுவரை, 2.17 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர்.

39. மாணவர்களிடையே கற்றல் இடைவெளியைக் குறைப்பதற்கென '**இல்லம் தேடிக் கல்வி**' மற்றும் அடிப்படை எழுத்தறிவை மேம்படுத்த, '**எண்ணும் எழுத்தும்**' போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி, கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு

இந்த அரசு முனைப்புடன் செயலாற்றி வருகிறது. குறிப்பாக, இல்லம் தேடிக் கல்வி திட்டம், தன்னார்வலர்கள் மூலம் 1.65 இலட்சம் மையங்களில் செயல்படுத்தப்பட்டு, மாநிலத்தில் 24.86 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

40. குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கும் வகையில், 2 இலட்சம் சதுர அடியில், 6 மாடிக் கட்டடத்தில் 4 இலட்சம் புத்தகங்களைக் கொண்ட அதிநவீன **கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை**, மதுரையில் சுமார் 218 கோடி ரூபாய் செலவில் இந்த அரசு அமைத்துள்ளது. கலைக்கூடம், பல்நோக்கு அரங்கம், குழந்தைகளுக்கான சிறப்பு அரங்கம், மாநாட்டுக் கூடம் என அனைத்து நவீன வசதிகளுடன் செயல்படும் இந்நூலகம் தென் மாவட்ட மக்களுக்கு பெரும் பயனளித்து வருகிறது.

41. உயர்கல்வி நிறுவனங்களை **'உயர்சிறப்பு மையங்களாக'** தரம் உயர்த்துவதில் இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. தொழில்துறைக்குத் தேவையான திறன்மிகு பணியாளர்களை உருவாக்குவது மட்டுமல்லாமல், நவீன அறிவியல் ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதன் மூலம் பல்வேறு துறைகளின் முன்னேற்றத்திற்கும் இது வழிவகுக்கிறது. தொழில்துறை 4.0 தரநிலையை எய்துவதற்காக, தொழில்துறை அமைப்புகளுடன் இணைந்து, 3,014 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 45 அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் 2,877 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 71 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும் (ITI) பாடத்திட்டங்களையும் கட்டமைப்புகளையும் மேம்படுத்துவதற்கான முன்னோடித் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

42. 10 இலட்சம் இளைஞர்களுக்கு தொழில் சார்ந்த திறன்களை வழங்கிடும் உயரிய நோக்கத்துடன் தொலைநோக்குப் பார்வை கொண்ட

**'நான் முதல்வன்'** திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கினார். 2022-23 ஆம் ஆண்டிலேயே, எதிர்பார்ப்புகளைத் தாண்டி, இத்திட்டம் 13 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்களுக்குப் பயிற்சியளித்து, இலக்கைத் தாண்டியது. 2023-24 ஆம் ஆண்டில், இத்திட்டம் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கும் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, மாநிலம் முழுவதும் 14 இலட்சம் மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு, 1.84 இலட்சம் விண்ணப்பதாரர்களில் 1.19 இலட்சம் மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றதன் வாயிலாக இத்திட்டம் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது.

43. மாநிலத்தில் வேலைவாய்ப்பைப் பெருக்கிட, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஆற்றிடும் மகத்தான பங்கினை இந்த அரசு உணர்ந்துள்ளது. கோவிட் தொற்று காலத்திற்குப் பிறகு,

இந்தத் துறைக்கு மிக முக்கியமான கடன் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், '**தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டத்தை**' இந்த அரசு அறிமுகப்படுத்தியது. இதன் விளைவாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு இதுவரை, 4,679 கோடி ரூபாய் மொத்தக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது 203 சதவீதம் அதிகமாகும்.

44. புத்தொழில்களையும், புத்தாக்க சுற்றுச்சூழல் அமைப்பையும் வளர்ப்பதற்காக எடுக்கப்பட்ட இந்த அரசின் அயராத முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில், **ஸ்டார்ட் அப் இந்தியா 2022 தரவரிசையில் நம் மாநிலம் "சிறந்த செயலாற்றும் மாநிலமாகத்"** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக 2018 ஆம் ஆண்டில் நம் மாநிலம் கடைசி இடத்தில் வகைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், இந்தச் சாதனை நம் மாநிலத்தின் செயல்திறனில் ஒரு மாபெரும் முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

இது, தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி, வளர்ந்து வரும் துறைக்கான ஆதார நிதி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதி மற்றும் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை உள்ளிட்ட இந்த அரசின் முன்முயற்சிகளுக்குக் கிடைத்த அங்கீகாரம் எனலாம்.

45. பல்வேறு துறைகளில் பணியாற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்களின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக பல முயற்சிகளை அரசு எடுத்துள்ளது. குறிப்பாக, '**தமிழ்நாடு இணையவழி தற்சார்புத் (GIG workers) தொழிலாளர்கள் நலவாரியத்தை**' தொடங்கியுள்ளது. உணவு விநியோகம், வாடகைப் பயணம் போன்ற இணையவழி அடிப்படையிலான ஒருங்கிணைப்புத் தளங்கள் மூலமாகப் பணியாற்றும் 1 இலட்சத்திற்கும் அதிகமான அமைப்புசாராத் தொழிலாளர்களின் நலனை இந்த வாரியம் பாதுகாக்கும்.

46. தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளும் பரவலாக வளர்ந்தால்தான் மாநிலத்தின் வளர்ச்சி நிலைக்கத்தக்கதாக இருக்கும் என்று இவ்வரசு நம்புகிறது. எனவே, ஊரகப் பகுதிகளில் தரமான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு '**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – II**' மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2023-24 ஆம் ஆண்டில், இதன் கீழ், 2,504 கிராம ஊராட்சிகளில் 1,149 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

47. மாநிலத்தின் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்புகளை வழங்குவதற்காக, ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ், 18,228 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் இப்பணிகளின் கீழ்

இதுவரை, ஊரகப் பகுதிகளில் 1 கோடிக்கும் அதிகமான வீடுகளுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

48. ஊரகப் பகுதிகளில் சாலை இணைப்புகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சி சாலைகளை மேம்படுத்திட '**முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தை**' அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அரசின் தொடர் முயற்சியால், 2021-22 ஆம் ஆண்டு முதல், மொத்தம் 6,742 கோடி ரூபாய் செலவில், 11,655 கி.மீ. நீளமுள்ள கிராமப்புறச் சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், முக்கியமான / பெரிய ஊராட்சி சாலைகளை இதர மாவட்டச் சாலைகளுக்கு இணையாகக் கொண்டு வர, 2,787 கி.மீ. நீள சாலைகளை 3,056 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் பணிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது.

49. மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் இதர முக்கியச் சாலைகளை மேம்படுத்துவதற்காக, நடப்பாண்டில் **விரிவான சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்** கீழ் 3,059 கி.மீ. நீள சாலை மேம்பாட்டுப் பணிகளை 4,861 கோடி ரூபாய் செலவிலும், 187 பாலங்கள் கட்டுமானப் பணிகளை 553 கோடி ரூபாய் செலவிலும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

50. பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் நகர்ப்புர மக்களின் அதிகரித்து வரும் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப, உள்ளாட்சி அமைப்புகள் அளித்திடும் சேவைகளின் தரத்தை தொடர்ந்து விரிவுபடுத்தி மேம்படுத்துவதும் இந்த அரசின் முக்கியக் கடமையாகும். 2021 ஆம் ஆண்டு முதல், 1.45 கோடி பயனாளிகளுக்கு 21,156 கோடி ரூபாய் செலவில் 261 குடிநீர் வழங்கல் திட்டங்களை அரசு அனுமதித்துள்ளது. மேலும் 13 மாநகராட்சிகள், 12 நகராட்சிகளுக்கான 47 பாதாள சாக்கடைத் திட்டங்களுக்காக, 71.67 இலட்சம் பயனாளிகள் பயன்பெறும் வகையில், 10,314 கோடி ரூபாய்

மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சாலைகளின் தரத்தை உயர்த்தவும், மேம்படுத்தவும், '**நகர்ப்புரச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்**' கீழ், அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் 19,766 சாலைப் பணிகளுக்காக 1,564 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

51. இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு திருக்கோவில்களின் சொத்துகள் மற்றும் நிலங்களைப் பாதுகாப்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. இதுவரை, கோயில்கள் மற்றும் அறநிலையங்களுக்குச் சொந்தமான 5,579 கோடி ரூபாய் மதிப்புள்ள 6,071 ஏக்கர் நிலங்களை இந்த அரசு ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்துள்ளது. மேலும், இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து, மொத்தம் 1,290 கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்குகள் செய்யப்பட்டுள்ளன. ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த கோயில்களைப் பழமை மாறாமல் புதுப்பித்துப்

பாதுகாப்பதற்கான பணிகள் 294 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

52. தமிழ் என்பது மொழி மட்டுமல்ல, நம்மை ஒன்றிணைத்து நமது வாழ்வை செம்மைப்படுத்தும் உயிர்நாடி, நமது பழமையின் பெருமை, தற்காலத்தின் சிறப்பு மற்றும் எதிர்கால வளத்தின் ஊற்றாகும். உலகத்தமிழர்களுக்கும், தாய்த் தமிழகத்திற்கும் இடையேயான தொப்புள்கொடி உறவைப் பேணிப் பாதுகாக்க அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அயலகத் தமிழ் இளைஞர்களுக்கு முழு நிதியுதவியுடன் கூடிய பண்பாட்டுச் சுற்றுலா அனுபவத்தை வழங்குவதற்காக இந்த அரசு அண்மையில் '**வேர்களைத் தேடி**' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டின் வளமான வரலாறு, பண்பாடு மற்றும் கட்டடக்கலை ஆகியவற்றின் பல்வேறு அம்சங்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம், உலக நாடுகளில்

'தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தூதர்களாக' மாற்றுவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

53. இந்த அரசு பதவியேற்றது முதல், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது மட்டுமன்றி, அவர்களின் எதிர்பார்ப்புகளையும் தாண்டி அவர்களது தேவைகளையும் நிறைவு செய்துள்ளோம். இந்தக் குறுகிய காலத்தில் நாங்கள் நிறைவேற்றிய சாதனைகள் மற்றும் நாங்கள் ஒன்றாக அடைந்த முன்னேற்றம் குறித்து இன்று இந்த மக்கள் மன்றத்தில் முன் பெருமிதத்தோடு நிற்கிறோம். தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வு மற்றும் செழுமைக்காக நாங்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதோடு, மகத்தான தமிழ்க் கனவை நனவாக்க உறுதியாக உள்ளோம். இந்த அரசின் மீது நம்பிக்கை வைத்துள்ள தமிழ்நாட்டு மக்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, சமூகநீதி, மத நல்லிணக்கம், பகுத்தறிவுச் சிந்தனை மற்றும் மக்களாட்சியின் மாண்புகள் போன்றவற்றிற்கு நாட்டிற்கே வழிகாட்டியாக தமிழ்நாடு தொடர்ந்து திகழும்

வகையில் இந்த நம்பிக்கை வரும்காலங்களிலும் நிலைக்கும் என நம்புகிறேன்.

54. மீண்டும் ஒருமுறை அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு மகாகவி பாரதியாரின் காலத்தை வென்ற கவிதை வரிகளுடன் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

**வாழிய செந்தமிழ்!**

**வாழ்க நற்றமிழர்!**

**வாழிய பாரத மணித்திரு நாடு!**